முற்பகல் 11-20

3. அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு.

மாண்மிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. வி. பி. சந்திரசேகர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம் மற்றும் தொழிற்சாலைகள் குறித்த மதிப்பீட்டுக் குழுவினுடைய 15-வது அறிக்கையையும், நகராட்சி நிர்வாகம் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் 16-வது அறிக்கையையும், பேரவைக்கு அளிக்கிறேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால், அவ்வறிக்கைகளை அச்சிட்டு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் நகல்கள் உறுப்பினர் களின் பார்வைக்காகச் சட்டமன்ற நூலகத்திலே வைக்கப்பட் டிருக்கின்றன. அச்சிட்ட நகல்கள் பின்னர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக என்னை நியமித்து பணியாற்ற உத்தரவிட்ட மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும். தமிழகத்தின் முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். இப்பணியினை சிரமேற்கொண்டு பணியாற்றி முடித் துள்ளேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, எனது நன்றியையும், வணக்கத்தையும் கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராட்டுக்கள்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. மா. சுந்தரதாஸ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 143 முதல் 146 வரையிலான 4 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.